**தலைப்பு 232 – சிறைச்சாலைகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 232 – சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 அக்தோபர் 06 திகதி சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும், என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

1.2 **கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கூற்று, வாணிப முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2. **கணக்குகள்**

---

2.1 **ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 8,559.05 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 6,898.74 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 1,660.31 மில்லியன் எனப்படும் 19.40 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டுவருவன | 5,319.05 | 4,792.33 | 526,72 | 9.90 |
| மூலதனம் | 3,240.00 | 2,106.41 | 1,133.59 | 34.99 |
| மொத்தம் | **8,559.05** | **6,898.74** | **1,660.31** | **19.40** |

2.2 **வருமானக் கணக்கு**

**மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம்**

திணைக்களத்தினால் 2016 ஆண்டிற்காக 20.01.04.00 கொண்ட வருமானக் குறியீட்டுக்காக ரூபா 50.00 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 51.03 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவை மதிப்பீட்டு வருமானத்தில் 102.06 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. விபரங்கள் கீழே காணப்படுகின்றன.

| **வருமானக் குறியீடு** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | **மதிப்பீட்டு வருமானத்தில் சதவீதமாக மிகைத்தல்** |
|---|---|---|---|---|
| | **மதிப்பீட்டு வருமானம்** | **உள்ளவாறான வருமானம்** | **மிகைத்தல்** | |
| | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | |
| 20.01.04.00 | 50.00 | 51.03 | 1.03 | 2.06 |

**2.3 முற்பணக் கணக்கு**

**2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 23201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள வாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள வாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள வாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 140.00 | 135.53 | 125.00 | 128.08 | 400.00 | 272.87 |

### 2.3.2 வாணிப முற்பணக் கணக்கு

#### (அ) பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்

திணைக்களத்தினால் பேணப்பட்டிருந்த விடய இலக்கம் 23202 கொண்ட சிறைச்சாலைகள், கைத்தொழில்கள் மற்றும் விவசாய விவகாரம் தொடர்பாக வாணிப முற்பணக் கணக்கிற்கான பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள வாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள வாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள வாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள வாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 100.00 | 96.96 | 125.00 | 150.87 | 62.00 | 19.12 | 12.00 | 4.15 |

#### (ஆ) நிதி விளைவுகள்

விடய இலக்கம் 23202 கொண்ட சிறைச்சாலைகள் கைத்தொழில்கள் மற்றும் விவசாய விவகாரம் தொடர்பான வாணிப முற்பணக் கணக்கின் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| முற்பணக் கணக்கு விவகாரம் | நிதி விளைவுகள் | | | |
|---|---|---|---|---|
| | 2016 | | 2015 | |
| | அனுமதிக்கப்பட்ட கட்டணம் இன்றி இலாபம் | அனுமதிக்கப்பட்ட கட்டணத்துடன் நட்டம் | அனுமதிக்கப்பட்ட கட்டணம் இன்றி இலாபம் | அனுமதிக்கப்பட்ட கட்டணத்துடன் நட்டம் |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| சிறைச்சாலைகள் கைத்தொழில் மற்றும் விவசாய விவகாரம் | 63.07 | 10.34 | 50.80 | 9.51 |

## 2.4 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு கட்டுநிதிக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8.17 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **கட்டுநிதிக் கணக்குகளின் இலக்கம்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 7002/0000/00/0078/2016/000 | 0.18 |
| 7002/0000/00/0079/2016/000 | 7.99 |
| மொத்தம் | **8.17** |

## 2.5 பொது வைப்புக் கணக்குகள்

திணைக்களத்தின் கீழ் காணப்படும் 07 பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 300.72 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **வைப்புக் கணக்குகளின் இலக்கம்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0016/000 | 1.08 |
| 6000/0000/00/0002/0017/000 | 3.67 |
| 6000/0000/00/0006/0028/000 | 2.31 |

| | |
|---|---|
| 6000/0000/00/0006/0018/000 | 3.92 |
| 6000/0000/00/0016/0062/000 | 286.64 |
| 6000/0000/00/0018/0075/000 | 2.10 |
| 6000/0000/00/0013/0125/000 | 1.00 |
| | ------------ |
| மொத்தம் | **300.72** |
| | ====== |

## 2.6 கணக்காய்வு அவதானிப்பு

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படாமை

திணைக்களத்தினால் 1978 திசெம்பர் 19 திகதி 842 ஆம் இலக்க திறைச்சேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 3.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல்

மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை பதில் அனுப்பியிருக்காததுடன், அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 15,778,078 தொகையாக இருந்தது.

## 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

### பாதீட்டு முரண்கள்

திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகைகள் திட்டத்திற்கு இணங்க செயற்படாமையால் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் 4 செலவு விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளில் பயன்படுத்திய பின்னர் சேமிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 37 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை வீச்சு அளவினதாக காணப்பட்டது.

**3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான இணக்கக் கூற்று**

விடய இலக்கம் 23201 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,328,320 தொகையாகக் காணப்பட்டதுடன், அந்த நிலுவை மீதி 1 வருடம் மற்றும் 5 வருடங்கள் வரை காலவீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு திணைக்களத்திற்கு இயலாதுள்ளது.

(ஆ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திணைக்கள ஏடுகளின் பிரகாரம் மற்றும் திறைசேரியின் ஏடுகளின் பிரகாரம் முற்பணக் கணக்கின் மீதி ரூபா 90,268 தொகையினாலும், அத் திகதியில் உள்ளவாறு தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பு மற்றும் திணைக்கள ஏடுகளின் பிரகாரம் தனிப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 923,842 தொகையினாலும், தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பு மற்றும் திறைசேரி ஏடுகளின் பிரகாரம் தனிப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 833,574 தொகையினாலும் வித்தியாசம் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டு இறுதியிலும் அவ்வித்தியாசத்தை இணக்கஞ் செய்து சரிசெய்திருக்கவில்லை.

(இ) வதுபிடிவல சிறைச்சாலை மூடப்பட்ட பின்னர் அச் சந்தர்ப்பத்தில் அங்கு கடமையாற்றிய 28 ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் ரூபா 168,183 தொகையான கடன்மீதி குறிப்பிட்ட ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் அதன் பின்னர் அவர்களை இணைத்துள்ள இடங்களுக்கு சாட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மீளாய்வாண்டு இறுதியிலும் அந்த கடன் மீதிகள் நிலுவையாகக் காணப்பட்டன. 2016 திசெம்பர் 31 திகதி அளவில் சேவையை விட்டுச் சென்றுள்ள 17 ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 32,176 தொகையும், 8 ஓய்வு பெற்றுள்ள ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 113,363 தொகையும் மற்றும் கடமையில் ஈடுபட்டுள்ள 3 ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 22,303 தொகையும் ஆக நிலுவை மீதியை அறவீடு செய்வதற்காக திணைக்களத்திற்கு இயலாதுள்ளது.

**3.5 வாணிப முற்பணக் கணக்கு**

விடய இலக்கம் 23202 கொண்ட சிறைச்சாலைகள் கைத்தொழில் மற்றும் விவசாய விவகாரங்கள் தொடர்பாக வாணிப முற்பணக் கணக்கு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆண்டிற்கான முற்பணக் கணக்கு தொடர்பாக முனைப்பழிப்புள்ள கணக்காய்வு அபிப்பிராயம் வெளியிடப்பட்டதுடன் முன்னைய ஆண்டு தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்று வெளியிடப்படவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 3,595,980 இற்கான கடன்கொடுத்தோர் மற்றும் ரூபா 554,351 இற்கான அட்டுறுச் செலவுகள் தொடர்பாக மீதிகளை உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு அரச மற்றும் தனியார் துறையினரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 63.79 மில்லியனிற்கான கடன்பட்டோர் மீதியில்

மீளாய்வாண்டின் போது ரூபா 22.36 மில்லியன் தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொதுத்துறையில் இருந்த அறவிடப்பட வேண்டிய ரூபா 63.19 மில்லியன் கடன்பட்டோர் மீதிகளில் அட்டவணை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் மீதிகளை உறுதிப்படுத்தல்களும் பெற்றிருக்கவில்லை. அதே போல் அக் கடன்பட்டோர் மீதிகளில் 10 வருடங்களை விட கூடுதலான காலம் முதல் காணப்படும் ரூபா 8.95 மில்லியன் தொகையும், 5 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரை கால வீச்சிலிருந்து கொண்டு வரப்படும் கூட்டுத்தொகை ரூபா 4.13 தொகையும் மற்றும் 1 வருட முதல் 5 வருடங்கள் வரை காலவீச்சிலிருந்து கொண்டு வரப்படும் கூட்டுத்தொகை ரூபா 28.39 மில்லியன் தொகையும், மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்வதற்கு இயலாதுள்ளது. அதன் பிரகாரம் திணைக்களத்தின் நிலுவை கடன் மீதிகள் அறவீடு செய்வதில் முன்னேற்றம் மிகவும் பலவீன நிலையில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(ஈ) சிறைச்சாலை தங்குவோரை புனர்வாழ்வழித்து அவர்களை சமூகத்திற்கு அனுப்பிய பின்னர் மீண்டும் குற்றமிழைக்காமல் தவிர்ப்பதற்காகவும், சிறைச்சாலை இருக்கம் காலப்பகுதியில் அவர்களுக்கு பல்வேறு துறைகளில் தொழிற்பயிற்சி வழங்குதல் இந்த முற்பணக் கணக்கு விடயத்தின் குறிக்கோளினை நிறைவேற்றக் கூடிய விதமாக இனங்கண்ட செயற்பாடுகளை அடங்கிய செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. அதற்குப் பதிலாக மதிப்பீட்டு பாதீடு ஒன்று தயாரிக்கப்பட்டு அதனை செயல் நடவடிக்கைத் திட்டமென பெயர் சூட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது 06 சிறைச்சாலை நிறுவனங்களில் நிறுவியிருந்த 08 வேலைத் துறைகளின் மூலம் உற்பத்தி ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம், முற்பணக் கணக்கின் கொடுக்கல் வாங்கல்கள் மீது உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) முற்பணக் கணக்கு விவகாரத்துடன் தொடர்பான 15 சிறைச்சாலை நிறுவனங்களின் செயல் நடவடிக்கைத் திட்டமென அறிமுகப்படுத்தியிருந்த மீளாய்வாண்டிற்கான பாதீடு 12 சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டிருந்தன. இறுதித் திருத்தத்தின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானத்தை இணக்கஞ் செய்யும் போது 07 சிறைச்சாலை நிறுவனங்களில் வருமானம் ரூபா 18.15 மில்லியனினால் அதிகரித்திருந்ததுடன் 05 சிறைச்சாலை நிறுவனங்களின் வருமானம் ரூபா 2.74 மில்லியனினால் குறைந்திருந்தது. அத்திருத்தங்களின் பிரகாரம் மதிப்பீட்டு செலவுகள் மற்றும் உள்ளவாறான செலவுகளை இணக்கஞ் செய்த போது 07 சிறைச்சாலை நிறுவனங்களில் மொத்தச் செலவுகள் ரூபா 16.73 மில்லியனினால் அதிகரித்திருந்ததுடன் 03 திறைச்சேரி நிறுவனங்களில் செலவினங்கள் ரூபா 1.52 மில்லியனினால் குறைந்திருந்தது. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 3.6 பொது வைப்புக் கணக்கு

2 வருடங்களை விஞ்சிய கூட்டுத்தொகை ரூபா 59,938 இற்கான வைப்பு கணக்கு மீதி ஒன்று தொடர்பாக நிதிப் பிரமாணங்கள் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

கீழ் காட்டப்பட்டுள்ளவாறு சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டதென தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(i) 2014 இன் 40 ஆம் இலக்க அனுசக்திச் சட்டத்தின் பிரகாரம், பொருத்துவதற்கு திட்டமிட்டிருந்த இயந்திரத்திற்காக அனுசக்தி ஒழுங்குபடுத்தல் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் மற்றும் இயந்திரத்தை பொருத்துவதற்கான கட்டிட இடவசதிகளுக்கு ஏற்பாடு செய்யாமல் ரூபா 19.47 மில்லியன் தொகை மற்றும் ரூபா 2.66 மில்லியன் செலவிடப்பட்டு முறையே ஆட்களைப் பரிசோதனை செய்யும் இயந்திரம் ஒன்றும் மற்றும் பொதிகளை பரிசோதனை செய்யும் இயந்திரம் ஒன்று 2015 ஜூலை 07 ஆம் திகதி கொள்வனவு செய்து மஹர சிறைச்சாலைக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆட்களை பரிசோதனை செய்யும் இயந்திரம் 6 மாதங்களை விட மிகையான காலமும், பொதிகளை பரிசோதனை செய்யும் இயந்திரம் 20 மாதங்களை விட மிகையான காலமும் விளைவற்றுக் காணப்பட்டது.

(ii) பொதிகளைப் பரிசோதனை செய்யும் இயந்திரத்தின் மூலம் 2017 ஜனவரி 10 ஆம் திகதி வரையும் தடைசெய்யப்பட்ட பண்டங்கள் எதனையும் வெளிப்படுத்துவதற்கு முடியாது இருந்தமையால், இயந்திரத்தின் மூலம் பரிசோதனை செய்யப்பட்ட அனைத்து பொதிகள் மற்றும் பண்டங்கள் கட்டாயமாக கையினால் பரிசோதனை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு நேரிட்டிருந்தது. இந்த நிலைமை தொடர்பாக மஹர சிறைச்சாலையினால் திணைக்களத்திற்கு அறிவித்திருக்கவில்லை.

**3.8 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தினால் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 359.76 மில்லியனாக இருந்தது. நிதிப் பிரமாணம் 94(1) இற்கு முரணாக 04 செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்திருந்த நிதியேற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் சேமிப்பினை மிகைத்து ரூபா 14.99 மில்லியனிற்கான பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தது.

**3.9 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 103,104, 105 மற்றும் 156 | திணைக்களத்திற்கு சொந்தமான மோட்டார் வாகனம் ஒன்று 2013 மார்ச் 11 திகதி திடீர் விபத்திற்கு உள்ளாகியிருந்த போதிலும் இது தொடர்பாக முறையான விசாரணையொன்று மேற்கொள்வதற்கு அல்லது நட்டங்கள் சேதங்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்வதற்கு அல்லது பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் பயன்படுத்தாமல் அகற்றப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப் பிரமாணம் 237(ஆ) | 2016 திசெம்பர் 31 திகதி அளவில் குறிப்பிட்ட வழங்குனர்களினால் கட்டிடப் பொருட்களை வழங்கியிருக்காத போதிலும், மஹர சிறைச்சாலையின் கொடுப்பனவைச் சான்றுபடுத்திய உத்தியோகத்தரினால் 4 கொடுப்பனவு உறுதிச் சான்றுகளுக்காக நிதிப் பிரமாணம் 237 இற்கு முரணாக ரூபா 1,697,645 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) நிதிப் பிரமாணம் 753(i)(ii) | மஹர சிறைச்சாலையினால் பண்டப் பதிவேடு முறைப்படி பேணப்பட்டிருக்காததுடன் சிறைச்சாலையின் ஒவ்வொரு கிளைகளினால் உப பண்டப் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக கிளைகளுக்கு வழங்கப்பட்டிருந்த பண்டங்களும் களஞ்சியத்தில் காணப்படும் பண்டங்கள் என கணிக்கப்பட்டதுடன் எடுத்துச் செல்லப்பட்டு அகற்றப்பட்ட பண்டங்கள் மாத்திரம் பண்டப் பதிவேட்டில் வழங்கப்பட்டவைகள் என உட்படுத்தியிருந்தது. |

| | |
|---|---|
| (iv) நிதிப் பிரமாணம் 1645 மற்றும் 1647(உ) | மஹர சிறைச்சாலைக்குச் சொந்தமாக 25 மோட்டார் வாகனங்கள் காணப்பட்ட போதிலும் மோட்டார் வாகன பட்டியல் ஒன்று தயாரித்திருக்கவில்லை. வாகனச் சம்பவக் குறிப்பேடுகளை இற்றைவரைப்படுத்தப்பட்டு அல்லது மேற்பார்வை உத்தியோகத்தரினால் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) பொது நிருவாக சுற்றறிக்கை

| | |
|---|---|
| 1990 அக்தோபர் 10 திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | மஹர மற்றும் மாத்தறை சிறைச்சாலைகளுக்குச் சொந்தமான 34 வாகனங்களின் எரிபொருள் எரிவு தொடர்பாக பரிசோதனை ஒரு வருடத்திற்கு மேற்கொள்ளப்பட்ட காலம் முதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3.10 உள்நாட்டு நிதியளிப்பின் மூலம் செயற்திட்டங்கள் அமுல் நடத்துதல்

**செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

திணைக்களத்தினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2007 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2011 ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்காக திட்டமிட்டிருந்த பல்லேகலே சிறைச்சாலை தொடர் கட்டிட நிர்மாண வேலைக்காக செலவு விடயம் 2502(1) இன் கீழ் வருடாந்தம் தொடர்ச்சியாக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. முறையான திட்டமிடல் ஒன்று இன்றி நிர்மாண வேலை மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் 2017 ஆகஸ்ட் 31 திகதி வரையும் வேலை பூர்த்தி செய்யப்படாமல் காணப்பட்ட செயற்திட்டத்தின் தாமதத்தின் காரணமாக மீளாய்வாண்டின் போது ஏற்பாடு செய்திருந்த ரூபா 1,927.04 மில்லியன் நிதியேற்பாடுகளில் இருந்து 2016 திசெம்பர் 31 திகதியளவில் ரூபா 1,285.05 மில்லியன் தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 02 வருடங்களில் பூர்த்தி செய்யும் அடிப்படையில் 2014 ஆண்டின் போது தயாரித்திருந்த ரூபா 37 மில்லியனுக்கான பொறியியல் மதிப்பீட்டுடனான சிறைச்சாலைகள் அலுவலக தலைமையக் கட்டிடத்தில் ரூபா 30 மில்லியன் தொகை வரையான வேலைப் பகுதிகள் மேற்கொள்வதற்காக அரச கூட்டுத்தாபனமொன்றினால் நிருவகிக்கப்படும் கம்பனி ஒன்றிற்கு பெறுகைகள் நடைமுறைகளை விட்டு விளகி வழங்கப்பட்டிருந்தது. விலைகூறல் பிணைகள் மற்றும் செயலாற்றுகை பிணைகளைச் சமர்ப்பிக்கும் தேவையில் இருந்து அக் கம்பனிகளை விடுவிப்பதற்காக அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவை அங்கீகாரத்திற்கு முரணாக அந்த கம்பனிக்கு ரூபா 37.3 மில்லியன் தொகை வரை வேலைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 8.9.1 வழிகாட்டலின் பிரகாரம் முறையான ஒப்பந்த உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

வேலை ஆரம்பிப்பதற்காக முற்பணம் என ரூபா 6.04 மில்லியன் தொகை செலுத்தியிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 திகதி வரை அவற்றில் ரூபா 2.84 மில்லியன் தொகையினை திருப்பி அறவீடு செய்திருக்காத போதிலும் வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிணைமுறி 2017 பெப்ரவரி 10 திகதி காலவதியாகியிருந்தது.

2017 ஆகஸ்ட் 31 வரை ஒப்பந்தக்காரருக்கு ரூபா 9.74 மில்லியன் செலுத்தியிருந்ததுடன் 2 வருடங்களில் பூர்த்தி செய்யும் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2017 ஆகஸ்ட் 31 திகதி அளவிலும் கட்டிடத்தின் பௌதீக ரீதியான முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைவான நிலையிலேயே காணப்பட்டது.

## 3.11 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறைசார் விதம் இன்றிக் காணப்பட்டது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### (அ) அரச பெறுகைகள் வழிகாட்டல் நடைமுறையில் இருந்து விலகல்கள்

அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 8.9.1 வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்படாமல் சிறைச்சாலை தலைமையகத்திற்காக ரூபா 1.99 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 100 புத்தக இராக்கைகள் மற்றும் அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்காக ரூபா 1.10 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 300 மெத்தைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

### (ஆ) போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 2.14.1 வழிகாட்டலின் பிரகாரம், பெறுகைகள் செயற்பாடுகளில் இருந்து விளகுவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல், சிறைச்சாலைக்கு பயிற்சிப் பாடசாலை ஒன்று மாத்தறை கொடவில வத்த பகுதியில் நிர்மாணிப்பதற்கான ரூபா 27.26 மில்லியனிற்கான ஒப்பந்த வேலை, செயலாற்றுகை பிணைமுறி ஒன்று பெற்றுக்கொள்ளாமல் 2014 செப்தெம்பர் 19 ஆம் திகதி அரச கூட்டுத்தாபனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 திகதியளவில் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 15.99 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த நாள் முதல் ஒப்பந்த வேலை கைவிடப்பட்டிருந்தது. கட்டிடத்தின் கூரை வேயப்பட்டிருக்காமையால் கூரையின் மற்றும் மேல் மாடியின் நிறுவப்பட்டிருந்த இரும்பு திரள் கட்டுகள் மற்றும் மேல் மாடியின் கொங்கிரீட் படை உக்கிய நிலையில் காணப்பட்டது. அதே போல் கட்டிடத்தின் உள்ளக அறைகளில் நீர் பாரிய அளவில் சேகரமாதலினால் நுளம்புகள் பரவுதல், பாசிகள் சேருதல், காடுகள் வளர்ந்திருத்தமையால் மாடுகள் போன்ற கால்நடைகள் தங்கி இருத்தல் காணக்கூடியதாக இருந்தது.

## 3.12 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

கடந்த 01 வருடம் முதல் 10 வருடங்கள் வரையான காலவீச்சில் ஏற்பட்டிருந்த 153 வாகன விபத்துக்கள் மற்றும் 04 கிளர்ச்சிகள் குழப்பங்கள் காரணமாக ஏற்பட்டிருந்த மொத்த நட்டம் ரூபா 34.17 மில்லியன் ஆகக் காணப்பட்டது. வட்டரக்க சிறைச்சாலையில் 2013 ஆண்டின் போது பண்டத்தொக்கு ஒன்று காலவதியாகி இருந்தமையால் ஏற்பட்டிருந்த மீளாய்வாண்டு இறுதி வரை மதிப்பீடு செய்யப்படாத நட்டங்கள் மற்றும் மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்த

பெறுமதி மதிப்பீடு செய்திருந்த மொத்த நட்டம் ரூபா 2.52 மில்லியன் ஆன 18 வாகன விபத்துக்கள் தொடர்பாகவும், நிதிப் பிரமாணங்கள் 103, 104 மற்றும் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவற்றில் மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்த நட்டத்தினை நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேட்டில் பதிவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் 2016 அக்தோபர் 16 திகதி வெலிகட சிறைச்சாலைக்குச் சொந்தமான வாகனம் ஒன்று விபத்திற்கு உள்ளாகியமையால் ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 340,312 தொகையினால் குறைவாக சேதங்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

**3.13 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

ஒவ்வொரு நாளும் சிறைச்சாலைக்கு உட்படுத்தப்படும் தடுத்து வைக்கப்பட்டவர்களை பதிவு செய்தல் மற்றும் தற்போது தடுத்து வைத்துள்ள தடுத்து வைக்கப்பட்டவர்கள் சுமார் 30,000 பேரில் தகவல்களை முறைமைக்கு உட்படுத்தும் குறிக்கோளுடன் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 85 மில்லியனுக்கான தகவல்கள் முகாமைத்துவ முறைமையொன்றினை செயற்படுத்துவதற்காக 2014 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 99 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த தகவல் முறைமைகள் பரீட்சாத்த அடிப்படையில் செயற்படுத்துதல் வெலிக்கடை சிறைச்சாலையில் மாத்திரம் நிறுவுவதற்காக 2016 நவம்பர் 30 ஆந் திகதி வரை செலவிடப்பட்டிருந்த மொத்தத் தொகை ரூபா 38.33 மில்லியனாகும். எனினும் முறைமை திட்டமிடலின் காணப்பட்ட பலவீனங்கள், தளத்தில் பதிவிடாமை மற்றும் முறைசார் விதமாக இணைய தள வசதிகள் பெற்றுக்கொள்ளாமையினால் 2017 ஆகஸ்ட் 31 திகதி அளவிலும் முறைமை இடையிடையில் முறிவுகளுக்கு ஆளாகி உரிய முறைப்படி செயற்படுத்துவதற்கு முடியாத நிலைமையினை அடைந்திருந்தது. முறைமை உரிய முறைப்படி செயற்படாமல் காணப்பட்ட போதிலும் ரூபா 3.06 மில்லியன் தடுத்து வைத்தல் பணத்தில் 89 சதவீதம் எனப்படும் ரூபா 2.74 மில்லியன் தொகை 2016 திசெம்பர் 16 ஆம் திகதி அளவில் ஒப்பந்தக்காரருக்கு திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது.

**3.14 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மஹர சிறைச்சாலையின் ஒழுக்காற்று விசாரணை உள்ளடங்கிய அறிக்கைப் புத்தகம் 2013 ஆண்டு முதல் இற்றைப்படுத்தப்பட்டிருக்காததுடன் அவ் வருடம் முதல் தொடர்புபடுத்தப்பட்டிருந்த 214 ஒழுக்காற்று விசாரணைகளில் 13 இறுதி பரிசோதனை அறிக்கைகள் மாத்திரம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

(ஆ) கைத்தொழில் துறையில் சேவையாற்றும் விடுதியாளர்களின் சிறை வேதனத்தை திருத்தங்கள் செய்வதற்காக சிறைச்சாலை மா அதிபரினால் நியமனம் செய்யப்பட்டிருந்த குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையின் விதந்துரையின் பிரகாரம் சிறை ஊதியம் திருத்தத்திற்காக அமைச்சின் செயலாளரினால் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், 03 வருடங்களை விட மிகையான காலம் அந்த வீதத்தினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மஹர சிறைச்சாலையின் சாரதிகளின் கோரிக்கையின் பிரகாரம் கடந்த ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது 03 மோட்டார் வாகனங்களுக்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 240,858 தொகை பெறுமதியான டயர்களை பயன்படுத்தாமல் களஞ்சியத்தில் தடுத்து வைத்தல் மற்றும் தாமதித்து வழங்கியதன் காரணமாக அந்த டயர்களின் உத்தரவாதக் காலத்தில் பெரும்பகுதி களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2014 நவம்பர் 02 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த மாத்தறை பிடபத்தர புனர்வாழ்வு மத்திய நிலைய வளவில் அமைந்துள்ள 07 ஏக்கர் வயல் நிலப்பரப்பில் 2016 ஆம் ஆண்டின் போது 3680 கிலோ விளைச்சலினை பெற்று அதனை அரிசியாக மாற்றி விடுதியாளர்களின் பயனுக்காக வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியாகிய 2016 திசெம்பர் 07 திகதி முதல் 2017 செப்தெம்பர் மாதம் வரை இந்த வயல் காணியில் விவசாயம் செய்யப்படாமல் தரிசு நிலமாக காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(உ) மீளாய்வாண்டின் போதும் மற்றும் முன்னைய ஆண்டின் போது மாத்தறை சிறைச்சாலைக்கு பச்சை மற்றும் வரண்ட உணவு வழங்குனரினால் வழங்கியிருந்த உணவுகளின் மனித பயன்பாட்டிற்கு பொருத்தமில்லாத கரட், கோவா, நெத்தோலி, தேயிலை மற்றும் மீன் என்பன காணப்பட்டதென பொதுச் சுகாதார பரிசோதகரினால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிசோதனைகளின் போது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அது தவிர வழங்குனருடன் மேற்கொண்டிருந்த உடன்படிக்கைக்கு முரணாக சந்தைவிலை அதிகரித்திருந்தமையால் சீனி வழங்குவதை வழங்குனர் நிறுத்தியிருந்த போதிலும் அது தொடர்பாக நடவடிக்கைகள் ஏதும் திணைக்களத்தினால் எடுத்திருக்கவில்லை.

(ஊ) சிறைச்சாலையில் நிலையியற் கட்டளை 653 மற்றும் 673 பந்திகளில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக மஹர சிறைச்சாலையில் பழைய கட்டிடமொன்றினை உடைத்து அகற்றுவதற்காக மற்றும் அதன் மீது புதிய கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்காக தடுத்து வைத்துள்ளவர்களை ஈடுபடுத்தியிருந்தமையால் தடுத்து வைக்கப்பட்டவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.15 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப் பட்ட பதவியணி யினர் | உள்ளவாறான பதவியணி யினர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 165 | 84 | 81 |
| (ii) | மூன்றாம் நிலை | 132 | 74 | 58 |
| (iii) | இரண்டாம் நிலை | 7,154 | 5,683 | 1,471 |
| (iv) | ஆரம்ப நிலை | 371 | 322 | 49 |
| | **மொத்தம்** | **7,822** | **6,163** | **1,659** |